# பெரியமேடு பகுதியில் போக்குவரத்து மாற்றம்

**சென்னை, ஏப். 14–**

மெட்ரோ ரயில் கட்டுமான பணிகள் காரணமாக, பெரியமேடு பகுதியில், போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.

மெட்ரோ ரயில் கட்டுமான பணி காரணமாக, 2012, செப்., 9ல் இருந்து, பெரியமேடு, ராஜா சர் முத்தையா சாலையில், ஈ.வெ.ரா., சாலை சந்திப்பில் இருந்து, அதே பகுதியில் உள்ள, மசூதி பாயின்ட் வரை, ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டு இருந்தது.

சென்ட்ரல் ரயில் நிலையம் செல்ல, அல்லிக்குளம் சாலை வழியாக



வாகனங்கள் திருப்பி விடப்பட்டன. தற்போது, கட்டுமான பணிகள் நிறைவடைந்ததால், நேற்று முதல், அச்சாலை இருவழிப் பாதையாக, போக்குவரத்து அனுமதிக்கப்படுகிறது.

மெட்ரோ பணிகளால், எட்டு ஆண்டுகளுக்கு பின், இரு வழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளது. இனி, ராஜா சர் முத்தையா சாலையில், ஈ.வெ.ரா., சாலை சந்திப்பில் இருந்து; பெரியமேடு மசூதி பாயின்ட் வரை, இரு வழியிலும் வாகனங்கள் செல்லலாம்.

மேலும், அல்லிக்குளம் சாலை ஒருவழி பாதையாக மாற்றப்பட்டுள்ளது. மசூதி பாயின்டில் இருந்து, சென்ட்ரல் ரயில் நிலையம் நோக்கி, அல்லிக்குளம் சாலை வழியாக வாகனங்கள் செல்ல அனுமதி கிடையாது என, போக்குவரத்து போலீசார் அறிவித்துள்ளனர்.